THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி கனம் அங்கத்தினர் நினைக்கக்கூடிய தொழில் கற்றுக்கொடுப்பது இல்லை. அங்கு ட்ரெய்னிங்குக்கு வருகிறவர்களுக்கு கைத்தொழில்கள் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த தொழில்களில் அவர்கள் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்களை வெளியே அனுப்புகிறார்கள். பரிபூர்ணமான தேர்ச்சி அவர்களுக்கு வருகிற வரையில் அவர்களை வெளியே அனுப்புவது இல்லை. வெளியே சென்றால் கைத்தொழிலை நல்ல முறையில் பயிற்சிவிக்கக்கூடிய நிலைமை வந்தால் தான் அவர்களை அனுப்பப்படுகிறது.

SRI A. A. RASHEED : Is it true that under the pretext of enforcement of the Immoral Traffic Act, the hotel-keepers are harassed by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If any one commits the offence of abettment, punishable under this Act, he should suffer even harassment.

Second Pay Commission

* 45 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have represented to the Centre to bring the Madras State Services within the purview of the Second Pay Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. LAZAR : ஏற்கனவே அதிகச் சம்பளம் வாங்கும் மத்திய சர்க்காருடைய ஊழியர்களுக்கு மேலும் அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் மாகாண சர்க்காருடைய சிப்பந்திகளுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார்களா? அதைப்பற்றி கமிஷனிடம் ஏதாகிலும் சொல்லி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி சம்பளக் கமிஷனிடம் புகார் செய்து பிரயோசனம் இல்லை. ஆனால் இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் நாங்கள் ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்திருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, even though the non-gazetted officers of our State do not come under the purview of the Second Pay Commission appointed by the Government of India, have the

[11th February 1958

Government of Madras thought about giving the same considerations that are recommended by the Second Pay Commission, to the non-gazetted officers whose relief was contemplated in Cabinet deliberations?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to remind hon. Members that it is only very recently that an all-round increase of Rs. 12 in dearness allowance was given to the N.G.Os., and that it costs the Government Rs. $4\frac{1}{2}$ crores per annum. I am sure hon. Members would, during the Budget time, see our resources position and then they may make further suggestions whether it would be possible for us to give any more dearness allowance at present.

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்காருக்கு யாதாஸ்து அனுப்பி இருப்பதாக சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் அறியலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றிய விவரம் இப்பொழுது என்னுடைய கையில் இல்லை. அதைப்பற்றி தனியான கேள்வி போட்டால் விவரம் சொல்லுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கும் பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ? மத்திய சர்க்கார் சிப்பந்திகள் இரண்டாவது சம்பள கமிஷனின் சலுகையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் போது மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கு இன்னும் முதல் சம்பளக் கமிஷனில் சலுகையையே கொடுத்து அமுல் நடத்தாமல் இருப்பது சரிதானா ? அப்படிக் கொடுத்து சலுகை காண்பிக்க இந்த மாகாண சர்க்கார் முன் வரவேண்டாமா ? இப்படி பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ?

THE HON SRI C. SUBRAMANIAM : நமது சர்க்காருடைய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு, அது நமது கையில் இருக்கிறது. இந்த மாகாண சர்க்காரால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கப்பட்டுதான் வருகிறது. அதனால் பாரபட்சம் ஒன்றும் காண்பிக்கப்படவில்லை. சம்பளம் கொடுப்பதில் வடக்கே இருக்கக்கூடியவர்களுக்கும், தெற்கே இருக்கக்கூடியவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அரசாங்கமும் தங்களுடைய வருவாய்க்குத் தக்கபடி எப்படி சம்பளம் கொடுக்க வேண்டும் எவ்வளவு மக்கள் நன்மைக்கு செலவிடப்பட வேண்டும் எந்த வகையில் பிரயோசனப்படுத்தப்பட வேண்டும் என்பதையெல்லாம் திட்டம் போட்டு வகுத்திருக்கிறது. அதன் மூலம் தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவ்விதம் எப்படி வருவாயை செலவு செய்யவேண்டும் என்று இந்த சட்டசபை தீர்மானம் மூலமாக தீர்வு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

Non-Gazetted Officers

* 46 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to increase the dearness allowance of and to provide amenities such as house-rent allowance or free quarters to all Non-Gazetted Officers in view of the additional Revenue derived by the Government on account of the recommendations made by the Second Finance Commission?

11th February 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no proposal to increase dearness allowance. A scheme is already in force from 1947 for grant of house-rent allowance to Non-Gazetted Government servants not provided with rent-free quarters and drawing a pay not exceeding Rs. 150 per mensem stationed in the City or municipalities or taluk headquarters and Revenue Divisional Headquarters which are neither municipalities nor headquarters of taluks. Certain categories of staff of the Jail, Police, Forest, Education, Medical, Agriculture, Cinchona, Fisheries and Public Works Departments are eligible for rent-free quarters. If quarters are not available for allotment to those eligible for rent-free quarters, they are given house-rent allowance. There is, however, no proposal for the provision of free quarters to all Non-Gazetted Officers.

SRI N. K. PALANISAMI : சம்பளத்தையும் அலவன்சையும் அதிகப்படுத்தும் விஷயமாக ஏப்ரல் மாதத்தில் கவனிக்கபடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் என்.ஜீ.ஓ. கூட்டத்தில் சொல்லியபடி எப்பொழுது செய்து தரப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாகிலும் சிபார்சு செய்திருக்கிறார்களா ? அப்படிச் செய்திருந்தால் அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஏப்ரல் மாதத்தில் கவனிப்பதாக நான் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. அடுத்த வருஷம் இதைப்பற்றி யோசிக்கப்படும் என்று சொன்னதாகத்தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஒருக்கால் அடுத்த வருஷம் என்பதை ஏப்ரல் மாதம் என்று அவர் எடுத்துக்கொண்டார் போலிருக்கிறது. அடுத்த வருஷம் என்பது ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்தாலும் அது மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் அந்த வருஷம் நீடிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு ஒரு யாதாஸ்து சமர்ப்பித்திருக்கிறேன். என்று இதற்கு முன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லி இருக்கிறேன். இதைப்பற்றி நாங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : டிசம்பர் மாதம் 24-ம் தேதி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் எக்ஸைஸ் மூலமாக வரக்கூடிய ஐந்து கோடி ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படியாகக் கொடுக்க பரிசீலனை செய்யப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார். இதைப்பற்றி ஏதாகிலும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி நான் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. பத்திரிகைகளில் வருவதையெல்லாம் வைத்துக்கொண்டு அதை நம்புவது என்பது சரியல்ல. எந்தப் பத்திரிகையில் எப்படி வந்ததோ அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பத்திரிகைகளில் எதை வேண்டுமானாலும் எழுதுவார்கள். கனம் அங்கத்தினருக்கு இந்த ஐந்து கோடி ரூபாய் வருவதைப்பற்றி மனதில் உறுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எக்ஸைஸ் வரி மூலமாக நமக்கு ஐந்து கோடி ரூபாய் கிடைப்பதில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Further, it is not correct to refer to Press Interviews and reports in asking questions in this House. The hon. Member may ask a separate question without making any reference to the supposed Press Interview.

[11th February 1958

Sri A. R. SUBBIAH MUDALIAR : இங்கு அசெம்பளி நடக்கக்கூடிய காலங்களில் அசெம்பளி செக்ரடேரியட் சிப்பந்திகள் அதிக நேரம் வேலை பார்க்க வேண்டியதாக இருப்பதால் அவர்களுக்கு ஏதாகிலும் சலுகைகள் காண்பிக்க சர்க்கார் யோசிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: ஏற்கெனவே கேட்ட கேள்விக்கும் இப்பொழுது கேட்கப்படுகிற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் அதிற்கு பதில் சொல்லப்படும்.

Rural Dispensaries

* 47 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government propose to run all the rural dispensaries themselves?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : பல ரூரல் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை. பல ஆண்டுகளாக அப்படி டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் டாக்டர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதுதான். அதனுல் டாக்டர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : சம்பளம் அதிகப்படியாகக் கொடுக்கப்படவேண்டுமென்றுல் அது நிதி மந்திரி அவர்களுடைய விஷயம். தாலூகா ஹெட்குவார்டர் ஆஸ்பத்திரிகளை யெல்லாம் இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்தி வருகிறது. அது இன்னும் பூர்த்தியாகவில்லை. ரூரல் டிஸ்பென்சரிக்கு எல்லாம் மருந்து கொடுப்பது லோகல் போர்டின் வேலை. அவைகள்தான் அதற்கு ஜவாப்தாரி. டாக்டர்களுக்கு மாத்திரம்தான் சர்க்கார் சப்சிடி கொடுக்கிறுர்கள். பிரைமரி சென்டர்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

Sri P. S. SANTHANAM : மருத்துவ விடுதிகளுக்கு டாக்டர்கள் வராத காரணம் என்னவென்றுல் அங்கே வரக்கூடிய டாக்டர் களுக்குத் தக்க வசதிகள் கிடையாது. குடியிருப்பதற்கு வீடுகள் கிடையாது. இந்தக் காரணங்களினுல் அரசாங்கம் அங்கே டாக்டர்களை அனுப்பினுலும் டாக்டர்கள் அங்கு செல்லமாட்டேன் என்று சொல்லி விடுகிறுர்கள். அதனுல் டாக்டர்களுக்கு அங்கேயெல்லாம் குடியிருக்க வசதி செய்து கொடுப்பதோடு மற்ற இதர வசதிகளையும் செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : கூடுமான வரையில் பிரைமரி சென்டர்கள் இருக்கும் இடங்களில் அம்மாதிரி ஏதாகிலும் செய்யலாம் என்ற உத்தேசம் சர்க்காரிடம் இருந்துகொண்டிருக்கிறது.

Sri A. V. P. PERIYA GURUVALA REDDIAR : கிராமங் களில் இருக்கக்கூடிய ரூரல் டிஸ்பென்சரிகளுக்கு எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் வந்து வேலை பார்ப்பதற்கு ஒருவரும் சம்மதிப்பது இல்லை. ஆகையினுல் கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளெல்லாம் மூடி கிடக்கின்றன. ஆகையினுல். அதற்கு பதிலாக அங்கு ஆயுர்வேதம், ஹோமியோபதி படித்த டாக்டர்களையாவது நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ரூரல் டிஸ்பென்சரி இருக்கும் இடங்களில் எல்லாம் டாக்டர்களின் தொகை குறைவாக இருந்தால் அங்கே யெல்லாம் ஹோமியோபதி டாக்டர்களை நியமித்து அதன் மூலம் அதை சரி செய்ய முடியுமா என்பதையெல்லாம் பற்றிய ஒரு விதமான யோசனை இருந்துகொண்டிருக்கிறது.

11th February 1958]

SRI V. SANKARAN : எவ்வளவு குறைந்த வருவாய் கிடைப்பதாக இருந்தாலும் சரி, நகரத்தில் வாழும் வாழ்க்கைதான் நல்லது என்று நினைக்கும் நிலைமையில், கிராமத்தில் வேலை செய்வதற்கு போகும் டாக்டர்களுக்கு வழக்கமாகக் கொடுப்பதைவிட அதிகமாக 50 அல்லது 75 ரூபாய் கொடுத்தால், கிராமத்திற்குப்போய் வேலை செய்யக்கூடிய டாக்டர்கள் அதிகமாகக் கிடைப்பார்கள். அம்மாதிரி செய்ய சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிரைமரி ஹெல்த் சென்டர் டாக்டர்களுக்கு, தனி வைத்தியம் செய்வதற்காக ரூ. 50 கொடுத்து வந்ததை பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் ரூ. 100 ஆக்கினேம் அது வரைக்கும்தான் செய்ய முடிந்தது.

Bagyalakshmi Mill, Pollachi

* 48 *Q.*—SRI N. K. PALANISWAMI (on behalf of Sri P. S. Chinnadurai) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Bagyalakshmi Mill at Pollachi has been closed;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps taken by the Government to give relief to the workers affected by the closure of the mill?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. The Pollachi Bagyalakshmi Mills, Pollachi, was closed on 3rd December 1957 due to financial difficulties.

(*c*) The workers have been advised to file claim petitions for payment of arrears of wages and lay-off compensation and retrenchment compensation.

SRI N. K. PALANISAMI : போதுமான முதலீடு இல்லாத காரணத்தால் அந்த மில் மூடப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்க்காரே அதை எடுத்து நடத்துவதற்கான யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நஷ்டம் அடைந்த மில்களையெல்லாம் சர்க்கார் நடத்துவது என்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் மீண்டும் மீண்டும் சொல்லியிருக் கிறேன். இந்த மில் ஏராளமாக நஷ்டம் அடைந்து விட்டது. இன்னும் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய விற்பனை வரியைக் கூட கொடுக்கவில்லை. ஆகையால், இதை நடத்த முடியவில்லை என்று அவர்கள் மூடிவிட்டார்கள்.

SRI A. R. MARIMUTHU : தொழிலாளர்களுக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கி அதிகமாக இருப்பதால், அந்தத் தொழிலாளர் களுக்குச் சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் இதற்கு உதவி கொடுக்க இயலாது.

[11th February 1958

Integration of the Special Armed Police Forces of the Southern States

* 49 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to integrate Special Armed Police Forces of the three Southern States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to integrate the Special Armed Police forces of the three Southern States. There is only a proposal to create a common Reserve Police Force for the Southern States consisting of Andhra Pradesh, Kerala, Madras and Mysore.

SRI A. A. RASHEED : Sir, may I know from the Hon. Minister when it is likely to be implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, it is still under the consideration of the Zonal Council.

SRI K. ANBAZHAGAN : அப்படிப்பட்ட வட்டாரப் பொதுப் போலீஸ் அமைப்பு ஏற்படுத்தப்படுமானுல் ஒரு மொழி வட்டாரத்திலே உள்ளவர்கள் பேசுகின்ற மொழியைப் புரியாத நிலையிலே உள்ள போலீஸார் அவர்களிடத்திலே நல்ல முறையில் நடக்காமல் மாறுபட்ட முறையில் நடப்பார்கள் என்ற அபிப்பிராயம் பொது மக்களிடத்திலே இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தென் பிராந்திய பாஷைகளைப் பொறுத்த மட்டில் ஒரு மொழியை அந்தப் பிராந்தியத்தி லுள்ள வேறு மொழி பேசுகின்றவர்கள் தெரிந்துகொள்வதிலே கஷ்டம் இல்லை ; சாதாரணமாகப் புரிந்து கொள்வார்கள்.

SRI S. B. ADITYAN : இப்பொழுது நம்முடைய ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீசிலே இருப்பவர்கள் எல்லோரும் இம்மாநிலத்தைச் சேர்ந்த வர்கள் தானு ? மலையாளிகளும், ஆந்திரர்களும் இருக்கிருர்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இங்கே உள்ளவர்கள் அநேகமாக தமிழர்கள்தான். மலையாளத்தைச் சேர்ந்த போலீஸ் அஸ்ஸாமில் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, may I know what the relevant reasons are for constituting a common force of this type for the Southern States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, this is just under the consideration of the Zonal Council. When the proposal takes final shape, I shall be then able to tell the hon. Member what exactly is the idea behind this common force.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, may I know when the proposed Police Force is constituted, whether men will be selected from the existing Services or whether the Governments will resort to new recruitment?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry I am not able to give any information at present relating to this proposal. Because, it is just under the consideration of the Zonal Council. They will of course take into account various aspects and take a decision. Then only, I shall be able to give some information to the House.

11th February 1958]

Employees State Insurance Scheme

* 50 Q.—SRI A. R. MARIMUTHU (on behalf of Sri P. S. Chinnadurai) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to extend the Employees State Insurance Scheme throughout the Coimbatore district?

THE HON. SRI R. VENKATARAMAN : A proposal to extend the scheme to unimplemented areas including those in the Coimbatore district is under consideration.

SRI N. K. PALANISAMI : தொழிலாளிகளுக்குமட்டும் இந்தச் சலுகை இல்லாமல், அவர்களுடைய குடும்பம் பூராவுக்கும் இந்தச் சலுகை கொடுக்கும் விஷயம் சர்க்கார் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்பொழுது அமுலாக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தினுடைய சலுகைகளை தொழிலாளர்களுடைய குடும்பத்தாருக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயத்தை மத்திய சர்க்கார் எற்றுக் கொண்டிருக்கிறது. அது நடைமுறையில் வருவதற்கு முன்பே, இன்னும் இந்தத் திட்டமே விஸ்தரிக்கப்படாத இடத்திற்கு முதலிலே விஸ்தரிக்க வேண்டுமென்று சென்னை ராஜ்ய சர்க்கார் அபிப்பிராயம் கூறியது. அதை மத்திய சர்க்கார் எற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இன்ஷீயூரன்ஸ் திட்டம் ஹோட்டல் தொழிலாளிகளுக்கும் இருக்கிறதா? இல்லையென்றால், அவர்களுக்கும் கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கும் இன்ஷீயூரன்ஸ் சட்டப் பிரகாரம் ஹோட்டல் தொழிலாளிகளுக்குச் செல்லுபடி ஆகாது.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : It is customary that, on the second day of the discussion on the Governor's Address, amendments to the Motion of Thanks will be moved. If the House has no objection, I shall ask all those hon. Members who have given notice to move their amendments formally. A vote on these amendments will be taken on the last day of the discussion. I shall call the hon. Members one by one. Hon. Member Sri Krishnaswamy Naidu has already moved the main Motion of Thanks. If any hon. Member who has given notice of the amendments is not in his seat when I call him, his amendment will be deemed not to have been moved. But, if the House agrees, as a special case, I shall allow one or two amendments on the last day. Now, hon. Member Sri Marudachalam may move his amendment. 9-10 a.m.

SRI N. MARUDACHALAM : நான் என் திருத்தத்தைப் பிரேரேபிக்கின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about the closure of the weaving sections in the Textile Mills in Coimbatore district and the consequent misery to more than three thousand families of Textile Workers.' "

[11th February 1958

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move—

" *Add* at the end the following :—

'but regret to note that no mention has been made about the steps to be taken to bring down the cost of living.' "

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI A. R. MARIMUTHU : Sir, I move—

" *Add* at the end the following :—

'but regret to note that no mention has been made about (1) the fixation of minimum wages to the agricultural labourers; and (2) provision of house-sites to the agricultural labourers in a speedy manner.' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

MR. SPEAKER : Hon. Member Sri P. S. Chinnadurai is absent. But he has already told me that he would be away on some urgent business and has requested permission to move his amendment later. So, I shall allow him to move his amendment on the last day.

SRI S. B. ADITYAN : நான் என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்.

" *Add* at the end the following :—

'but regret to point out that the Madras State Government have failed to take adequate steps to bring within the boundary of the State several predominantly Tamil-speaking areas.' "

SRI D. S. AUTHIMOOLAM : I second the amendment, Sir.

SRI S. B. ADITYAN : நான் என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்.

" *Add* at the end the following :—

'but regret to note that the Government have failed to insist on Tamil as Language of communication with the Centre.' "

SRI D. S. AUTHIMOOLAM : I second the amendment, Sir.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

" *Add* at the end the following :—

'but regret to note that no mention has been made about (1) the proposals to improve the backward riot-affected areas in Ramanathapuram district, (2) the introduction of new blocks in the remaining parts of our State and (3) the proposals that will be followed for ensuring the stability of the handloom industry.' "

11th February 1958]

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

SRI M. D. RAMASAMI : Sir, I move—

" *Add* at the end the following :—

'but regret to note that no mention has been made about (1) the unemployment position and the measures, if any, which the Government proposes to take to tackle it and (2) the present food situation and the Government's action to tackle it.' "

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI T. VELUSAMI : நான் என் திருத்தத்தை முன்மொழிகின்றேன்.

" *Add* at the end the following :—

'but regret to bring to notice that the people of this State have been deprived of their constitutional right of expression of opinion and of security for life and holdings.' "

SRI S. B. ADITYAN : நான் அதை வழி மொழிகின்றேன்.

SRI D. S. AUTHIMOOLAM : நான் என் திருத்தத்தை முன்மொழிகின்றேன்.

" *Add* at the end the following :—

'but regret to point out that the Government have not been well advised in abolishing the District Boards.' "

SRI S. B. ADITYAN : நான் அதை வழி மொழிகின்றேன்.

MR. SPEAKER : The next two amendments are those of Sri Kalyanasundaram. He has informed me that he could not be present to-day in the House and has requested permission to move his amendments later. So, I shall allow him to move his amendments on the last day.

SRI S. PAKKIRISWAMY PILLAI : நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கின்றேன் :—

" *Add* at the end the following :—

'but regret to find that no mention has been made about the hardship felt by the citizens of Madras in finding proper housing accommodation and about the failure of the State Government in taking up the facilities offered by the Central Government in the matter of Housing Scheme in the State.' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI K. ANBAZHAGAN : நான் முன்மொழிகின்றேன் :—

" *Add* at the end the following :—

'but regret to note that no reference is made to the Police excesses on 3rd and 6th January 1958, and the suffering of the public, the ill-treatment of the D.M.K. Leaders in Police custody,

[Sri K. Anbazhagan] [11th February 1958

and the demise of two men on account of Police action and (2) the plight of the handloom weavers, the Elementary School Teachers, the N.G.Os. and the Last Grade Government servants.' ''

SRI M. P. SUBRAMANIAM : நான் வழிமொழிகின்றேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I rise on a point of order.

'' முன் மொழிகின்றேன் '' என்று சொன்னால் '' **propose** செய்கிறேன் '' என்று அர்த்தம் ஆகாது. ஆகையால், '' **propose** செய்கிறேன் '' என்பதற்கு '' பிரேரேபிக்கிறேன் '' என்ற வார்த்தையை நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டு அதை உபயோகிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கின்றேன்.

SRI K. ANBAZHAGAN rose—

MR. SPEAKER : I do not wish to enter into a controversy over this question. For the present I shall allow the use of the word 'முன் மொழிகின்றேன்' to indicate 'propose' or 'move'. But, later if I find that it is not satisfactory, I shall come back to the House.

SRI A. GOVINDASAMY : என் பேரில் இருக்கும் திருத்தத்தை நான் முன்மொழிகின்றேன் :—

'' *Add* at the end the following :—

' but regret to add that the address has failed to emphasise the need for a judicial enquiry into the action of the police in denying the just and democratic rights of the opposition parties to hold public meetings and peaceful demonstrations during the recent visit of the Prime Minister, Nehru, resulting in repression and incidents which marred the prestige of our State.' ''

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

'' *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about (1) the crisis in the handloom industry due to heavy stock of handloom products for want of markets outside and the reduction of the rate of rebate on the handloom sales; (2) the necessity to maintain and increase the number of Fair Price Shops in the State due to the prevalent high price of rice; (3) the need to increase the educational, welfare, and such other facilities which would increase the status of the Harijans and other Backward Class people and the effective steps the Government propose to take to eradicate caste oppression predominantly prevailing in the rural areas; (4) the steps to be taken to reopen the industries and factories closed in the State in the private sector; (5) the steps taken to expedite the opening of a steel plant at Salem; and (6) the necessity to bring in legislation to ensure subsistence allowance of at least half a month's wage rate to the workers when their dispute is before the Labour Department or before the Court.' ''

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

MR. SPEAKER : I shall now accept 'முன்மொழிகின்றேன்' as equivalent to the word 'propose'. If, on further consideration, I find that it is wrong, I shall have to come back to the House.

III.—POINT OF ORDER *RE.* CRITICISM OF THE ACTION OF THE PRIME MINISTER.

MR. SPEAKER : Yesterday, hon. Member Sri Lazar raised a point of order when the Hon. Deputy Speaker was in the Chair. Interrupting the speech of hon. Member Sri A. V. P. Asaithambi, Sri Lazar, rising on a point of order had asked whether Sri A. V. P. Asaithambi was in order in criticising the action of the Prime Minister of India who was not a member of this House. On a consideration of the matter with the Deputy Speaker also, I do not think that in the present context I can rule out any reference to the Prime Minister. Because, in the course of the discussion on the Governor's Address, it may be necessary to refer to the Prime Minister as Prime Minister. But, in view of the person not being present in this House, it is desirable that hon. Members use restrained language when referring to him.

SRI M. P. SUBRAMANIAM : On a point of information, Sir.

MR. SPEAKER : There can be no point of information on a ruling. If the hon. Member wants he can raise a point of order.

II—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : The hon. Member Sri Asaithambi may continue his speech on the Governor's Address.

*SRI A. V. P. ASAITHAMBI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் மூன்றாம் தேதி நடைபெறவிருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தை ஆட்சியில் இருப்போர் தடை செய்தது மாத்திரம் அல்லாதபடி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைக் கைது செய்ததும், கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் மீது வரம்புக்கு மீறி அடக்கு முறையை அவிழ்த்து விட்டதும் ஆகிய செயல்களைப் பற்றி ஒரு பகிரங்க விசாரணையை நடத்தவேண்டுமென்பதை என்னுடைய கட்சியின் சார்பில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். ஜனவரி மாதம் மூன்றாம் தேதி தலைவர்களைக் கைது செய்கிற விஷயத்தில், ஆங்கிலேயர்கள் அடக்குமுறைக்குப் பெயர் பெற்றவர்கள் என்று இருந்தாலும்கூட, அவர்களையும் மிஞ்சும் விதத்தில் இந்தச் சர்க்கார் நடந்துகொண்டது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். 9-20 a.m.

தடை உத்திரவை மீறுவதற்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை மாத்திரம் இந்தச் சர்க்கார் கைது செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைக் கைது செய்து போலீசார் அழைத்துச் செல்லுகையில், பின்னாலே வந்து கொண்டிருந்த திரு. கருணாநிதி, எம்.எல்.ஏ. அவர்களையும் இந்தப் போலீசார் ஒரு காரணமும் இல்லாமல் கைது செய்தார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I point out, Sir, that a specific case is pending with the Court with regard to this arrest? The hon. Member's point that without any reason the arrests were made, when the matter is *sub judice* may not be proper.

MR. SPEAKER : The hon. Member will take note of the point.

[Sri T. P. Elumalai] [11th February 1958

வாரம் போட்டிருக்கிறோம், எம்மாதிரியான குழப்பங்கள் நடக்கும் என்பதை அறிந்துகொண்டு, கண்ணீர் வாயு உபயோகித்தால் அதை தடுப்பதற்கு வெங்காயம் வேண்டுமென்று வெகு உஷாராக வெங்காயத்தையும் கொண்டு வந்தார்கள். கேழ்வரகை கீழே இறைத்துவிட்டால் அந்த சமயத்தில் நேருவின் கார் வேகமாக போக முடியாது, அவர்கள் அப்பொழுது என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்திலே, கேழ்வரகு வைத்திருந்தார்கள். இம்மாதிரி பல ரூபத்தில் குழப்பத்தை விளைவிக்க அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் சட்ட சபையிலே அங்கலாய்த்துக்கொண் பேசுகிறார்கள். ஒன்றே ஒன்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் மந்திரிகளும், குறிப்பாக போலீஸ் மந்திரிக்கு அவர் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். இ. வி. ராமசுவாமி நாயக்கர் அவர்கள் இந்த நாட்டிலே பல குழப்பங்களை ஏற்படுத்தி கொண்டு வந்தார்கள். அவர்கள் குழப்பங்களையெல்லாம் ஏற்படுத்துவதற்கு இடம் கொடுத்தார்கள். பிறகு நிலைமை என்ன ஆயிற்று, என்ன நடந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவருடைய புத்தியெல்லாம் எந்த மார்க்கத்தில் சென்றிருக்கிறது ? ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அண்ணாதுரை போன்றவர்கள் அதில் ஈடுபடக்கூடாது என்ற பெரும் நோக்கததிலே, போலீஸ் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் அதற்கு உதவி செய்திருக்கிறார்கள். அந்த உதவிக்காக அமைச்சர்களை பாராட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சமயத்தில் தி.மு.க. பல காரணங்கள் சொல்லுகிறார்கள். ராஜாஜி போன்றவர்களை இழுத்து சாட்சியங்கள் கொடுக்கிறார்கள். ராஜாஜி எந்த வார்த்தை சொன்னாலும் சரி, அதில் சூழ்ச்சி இருக்கும், நம்பமுடியாது என்று அவர்களே சொல்லி வந்தவர்கள். இப்போது அப்படியே தலைகீழாக திருப்பியிருக்கின்றார்கள்.

DEPUTY SPEAKER : The hon. Member will continue his speech tomorrow. The House will now adjourn and meet again to-morrow at 8-30 a.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules, orders and notifications.

* 49. *Notification issued with G.O. Ms. No.* 104, *Public (General-M), dated 11th January* 1958, *under section* 4 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act XXXIX of* 1956.) (Laid on the table of the House under section 6 of the Madras Official Language Act, 1956.)

50. *Notifications issued with G.O. Ms. No.* 3669, *Public (Services-A), dated 30th December* 1957, *amending the Madras Public Service Commission Regulations,* 1954, *so as to exclude the post of the District Social Education Officers from the Commission's purview.* [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

B. Reports and other papers.

* 18. *Short review of activities of the Madras Record Office for the first half of* 1957–58.

* 19. *Memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission (Both English and Tamil Copy).*

* 20. *Report on the simplification and improvement of the Sales Tax System in Madras by Dr. P. S. Lokanathan.*